இன்றையதினம் முக்கூடலிலிருந்து கன்னியாகுமரிக்கு தண்ணீர் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, நாகர்கோவில் நகரத்திலும் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட ஏதுவாக இருக்கிறது. ஆகையினால், உலக்கருவி திட்டத்தை நிறைவேற்றுவீர்களேயானால், நாகர்கோவிலில் இருக்கிற, முக்கூடல் திட்டமும் வெற்றி பெறும். அதேபோல் கன்னியாகுமரிக்கு வருகிற பயணிகளுடைய தேவைகளும் நிவர்த்தி பெறும். ஆகையினால் உடனடியாக உலக்கருவி திட்டத்தை நிறைவேற்ற இந்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

(முற்பகல் 9.40)

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே கூறியுள்ளதைப் போல உலக்கருவிக்கு அருகில் உள்ள அருவியில் உள்ள நீரைப் பயன்படுத்தி, தோவாளை ஊராட்சி ஒன்றியத்தின், ஊராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்குக் குடி தண்ணீர் வழங்க, அதை ஒரு கூட்டு குடிதண்ணீர் திட்டமாகக் கருதி, சுமார் 2 கோடி ரூபாய்க்கு ஒரு உத்தேச மதிப்பீடு 73 ஆம் ஆண்டு தயாரிக்கப் பெற்றது. ஆனால் மேற்கொண்டு திட்டம் நிறைவேற்றப்படவில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. என்ன காரணத்திற்காக நிறைவேற்றப்படவில்லை என்று தெரியவில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அதற்காக ஒரு கோரிக்கையை கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கும், அந்த சம்பந்தப்பட்ட பேரூராட்சியிலிருந்து அனுப்புவார்களேயானால், அது பற்றி அரசு பரிசீலிக்கும்.

கட்டுப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனத் திட்டம்.

* வினா எண் 937—திரு. கு. ரமணி: மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கட்டுப்படுத்தப்பட்ட நீர்ப்பாசனத் திட்டம் உபவாய்க்கால் ஏரிகளின் மதகுகள் வழியாக ஒரு முன்னோடித் திட்டம் நடத்திப் பார்க்க தமிழக அரசு திட்டமிட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டத்தின் விவரங்கள் என்ன ?

(இ) அத் திட்டத்துக்கு என்ன செலவாகும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ), (ஆ) மற்றும் (இ) 500 ஏக்கரும் அதற்கு மேலும் ஆயக்கட்டு உள்ள ஏரிகளை நவீனப்படுத்துவதற்கான ரூ. 120 கோடி மதிப்பீடு கொண்ட திட்டம் தலைமைப் பொறி

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

யாளரால் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் ஏற்படும் பயனைத் தெளிவாக அறிந்து கொள்வதற்கு முன்னோடி திட்டமாக, செங்கற்பட்டு மாவட்டத்தில் பிள்ளைப்பாக்கம் ஏரியையும், அதன் வாய்க்கால்களையும் நவீனப்படுத்தும் வேலையை, அரசு அனுமதித்து மேற்படி வேலை நடை பெற்றுக்கொண்டிருக்கிறது. இம்முன்னோடித் திட்டத்திற்கு ரூ. 10.85 லட்சம் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, 500 ஏக்கருக்கும் அதற்கு மேலும், ஆயக்கட்டு உள்ள ஏரிகளில், இந்த முன்னோடித் திட்டத்தை அமுல் பண்ணுவதன் மூலம் மேற்கொண்டும் அதிகப்படியான நிலங்களுக்குப் பாசனம் கிடைப்பதற்கு இது வழி செய்யுமா? எந்த நோக்கத்தோடு இந்த திட்டத்தை அரசு ஆரம்பித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இந்த 500 ஏக்கரும் அதற்கு மேலும் பாசன வசதி பெறக் கூடிய ஏரிகள் மூலமாக தமிழ்நாட்டில் இப்பொழுது 6 லட்சம் ஏக்கர்கள் பயன் அடைகின்றன. இம் முன்னோடித் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாக மேலும் கூடுதலாக, 1,35,000 ஏக்கருக்கு புதிதாக பாசன வசதி அளிக்க வாய்ப்பு ஏற்படும். மேலும் 5,40,000 ஏக்கருக்கு பாசனத்தை உறுதிபடுத்துவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. இதன் காரணமாகத்தான் இந்தத் திட்டத்தை அரசு தயாரித்திருக்கிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நடைமுறை யாக்கப்படுவதை ஒட்டி, இரண்டாவது கட்டமாக, இப்படிப்பட்ட திட்டங் களுக்குள் இப்பொழுது கொண்டு வரப்படாத பெரிய ஏரிகள் இருக்கும்படியான பகுதிகள் எல்லாம், பெரிய குளங்கள் இருக்கும்படியான பகுதிகள் எல்லாம், இரண்டாவது கட்டத்தில் இதே திட்டத்தை விஸ்தரிப்பதற்கு அரசுக்கு ஏதேனும் திட்டம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: தலைவர் அவர்களே, இது ஒரு முன்னோடித் திட்டம்தான். செங்கல்பட்டு மாவட்டத்திலே இப்பொழுது முன்னோடியாகச் செயல்பட்டு வருகிறது. இந்த ஆண்டு மே மாதம் இறுதிக் குள்ளாக அறிக்கை கொடுக்க வேண்டும் என்று அரசு உத்தரவிட்டிருக்கிறது. அந்த அறிக்கை கிடைத்தவுடனேயே அதை அடிப்படையாக வைத்து 500 ஏக்கர்களுக்கு மேல் பாசன வசதி பெறக்கூடிய அனைத்து ஏரிகளையும் தமிழ் நாட்டிலே எடுத்துச் செய்வதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கம். எனவே, எந்த ஏரிகளும் விடப்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. பொ. உத்திராபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது நீர்ப்பாசனத் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, 500 எக்கர் களுக்கு மேற்பட்ட பாசன வசதி உள்ள ஏரிகளுக்கெல்லாம், தூர் எடுத்து நவீனப்படுத்தும் திட்டத்தைப் பற்றிச் சொன்னார்கள். அது மிக நல்ல திட்டம். வரவேற்பதோடு, தஞ்சை மாவட்டத்திலே, வடுவூரில் இருக்கக் கூடிய ஒரு பெரிய ஏரி தூர்ந்து வருகிறது. அது 500 ஏக்கருக்கு மேல் பாசன வசதி பெறக்கூடிய ஏரி என்பதன் காரணமாக, வரக்கூடிய அந்த வேலை பருவத்திலேயே, இந்த வடுவூர் ஏரியையும் அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்ள முன்வருவாரா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இந்த நீர்ப் பங்கீடு புதிதாக, வாட்டர் மானேஜ்மென்ட் என்பதை மையமாக வைத்துச் செய்யப்படுகிறது. தூர் எடுப்பது என்பது மட்டும் அல்ல, அந்தக் கண் மாயிலே செல்லக்கூடிய கால்வாய்களை நவீனப்படுத்தி, 25 அல்லது 50 ஏக்கர் களுக்குச் சிறு மதகுகளை வைத்து, சிக்கனமான முறையிலே நீர்ப் பங்கீடு செய்வதைப்பற்றி ஒரு பரிட்சார்த்தமாக நாம் இப்பொழுது செய்து கொண்டி ருக்கிறோம். தூர் எடுக்கிற வேலை இப்பொழுது எல்லா இடங்களிலும் இந்த வறட்சிக் காலத்தை ஒட்டி செயல்படுத்த வேண்டுமென்று அரசு உத்தரவிட்டி ருக்கிறது. இந்தத் திட்டத்தை ஏதாவது ஒரு இடத்திலே எடுத்து, செயல் முறையிலே நாம் வெற்றி கண்டபிறகு அனைத்து திட்டங்களுக்கும் அதை நாம் அமுல்படுத்தலாம்.

திருமூர்த்தி அணையருகே மற்றொரு அணை கட்டும் திட்டம்.

* வினா எண். 938—திரு. கு. ரமணி : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டம், உடுமலை தாலுகா திருமூர்த்தி அணை யருகில் ஒரு கோடி செலவில் மற்றொரு அணை கட்டும் திட்டமுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் மூலம் எவ்வளவு நிலத்துக்கு பாசன வசதி ஏற்படும் ?

(இ) இத் திட்டம் ஆரம்பித்து முடிய எவ்வளவு காலம் பிடிக்கும் ?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) திருமூர்த்தி அணை, பரம்பிக்குளம் ஆழியாறு திட்டத்தில் உள்ளடங்கியது. பரம்பிக்குளம் ஆழி யாறு திட்டத்தின் கீழ் மேலும் பாசன வசதியைப் பெருக்கப் போதுமான பாசனவளம் ((Irrigation potential)) இல்லை. ஆகவே, மற்றொரு